# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**

INTEGRATED INVESTIGATION FORM-I

C 8092382

1. District மாவட்டம் : VELLORE DISTRICT  PS: காவல்நிலையம் VIGILANCE AND ANTI-CORRUPTION, VELLORE  Year: ஆண்டு 2019  FIR No.: மு.த.அ. எண் 09/2019  Date: நாள் 17.5.2019

2. (i) Act சட்டம்:  Sections பிரிவுகள்: 7 of P.C. (Amendment) Act 2018.
   (ii) Act சட்டம்: PREVENTION OF CORRUPTION  Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: (AMENDMENT) ACT 2018.  Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்  Date from : நாள் முதல் 19.4.19  Date to : நாள் வரை 16.5.2019
   Time Period : நேர அளவு  Time from : நேரம் முதல்  Time to : நேரம் வரை
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 17.05.2019  Time நேரம் : 06.30 hrs.
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் VOLUME-I 2019  Time நேரம் : 06.30 hrs. to 07.30 hrs.

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக  WRITTEN COMPLAINT

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும்  27 kms, EAST DIRECTION
   Beat Number : முறைக் காவல் எண் —  (b) Address : முகவரி TNEB, WALAJA, VELLORE.
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் —  District : மாவட்டம் —

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் P. BALAJI  (b) Father's/ ~~Husband's~~ Name : தந்தை / கணவர் பெயர் PRABAKARAN
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 1993  (d) Nationality : நாட்டினம் INDIAN  (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள்  Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் EMPLOYED IN PRIVATE COMPANY  (g) Address : முகவரி No. 2, THIRUVALLUVAR NAGAR, ANANDHALAI VILLAGE, WALAJA TALUK, VELLORE DISTRICT.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   1. Tr. SARAVANNAN, COMMERCIAL INSPECTOR, TANGEDCO, WALAJA, VELLORE DISTRICT.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
   — NO DELAY —

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

Particulars of ... (Attach separate sheet if necessary)
... விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

Separate Sheet Enclosed

... u/s as mentioned at item No.2 registered the case ... Rank ... to take up the Investigation / Refused ... on point of jurisdiction.

... பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு ... பதவி ... நிலை ... / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ... அனுப்பப்படுகிறது

... correctly recorded and a copy given to the Complainant / ...

... அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் ...

P. Baji 17/05/19

17.05.19

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

17.05.2019
8.30 hrs.

Name பெயர் S. VIJAY,
Rank நிலை INSPECTOR OF POLICE,
VIGILANCE & ANTI-CORRUPTION, VELLORE.

<u>**பணிந்து அனுப்பப்படுகிறது:-**</u> வேலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு ஆய்வாளர் S.விஜய் ஆகிய நான் 17.05.2019-ம் தேதி காலை 06.30 மணிக்கு அலுவலகத்தில் ஆஜரில் இருந்தபோது, புகார்தாரர் P.பாலாஜி, வயது.26/19, த/பெ. பிரபாகரன், பிளாட் எண்.2, திருவள்ளுவர் நகர், அனந்தலை கிராமம், வாலாஜா தாலுக்கா, வேலூர் மாவட்டம் என்பவர் நேரில் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று என்னுடைய தகவலாளர்களை தொடர்பு கொண்டு எதிரியின் நடத்தை குறித்து விசாரணை செய்ததில் எதிரியானவர், அவரது எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ள பொது மக்களிடம் லஞ்சமாக பணம் பெறுவது உறுதி செய்யப்பட்டது. மேலும் புகார் தாரரின் நம்பகத்தன்மை மற்றும் எதிரியின் நடத்தை குறித்து விசாரணை செய்ததில் திரு.சரவணன், கமர்ஷியல் இன்ஸ்பெக்டர், TANGEDCO, வாலாஜா, வேலூர் மாவட்டம் என்பவர் மீது பிரிவு 7 of Prevention of Corruption (Amendment) Act 2018-ன் கீழ் வழக்கு பதிவு செய்ய முகாந்திரம் இருந்தமையால் சென்னை இயக்குநரக ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை அனுமதிப் பெற்று, புகார்தாரர் திரு.P.பாலாஜி என்பவர் கொடுத்த புகார் மனுவின் பேரில் இன்று 17.05.2019-ம் தேதி 07.30 மணிக்கு வேலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.09/2019 பிரிவு7 of Prevention of Corruption (Amendment) Act 2018-ன் கீழ் எதிரி திரு.சரவணன், கமர்ஷியல் இன்ஸ்பெக்டர், TANGEDCO, வாலாஜா, வேலூர் மாவட்டம் என்பவர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது. புகார்தாரர் கொடுத்த புகார் மனுவின் விவரம் பின்வருமாறு அனுப்புனர் P.பாலாஜி, வயது.26/19 த/பெ. பிரபாகரன் பிளாட் எண்.2, திருவள்ளுவர் நகர் அனந்தலை கிராமம் வாலாஜா தாலுக்கா வேலூர் மாவட்டம் பெறுநர் காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு வேலூர் ஐயா, நான் B.E. (EEE) படித்துள்ளேன் என் அப்பா பிரபாகரன் சோளிங்கர் டி.வி.எஸ் கம்பெனியில் வேலை செய்கிறார் என் அம்மா மைதிலி குப்பக்கல்மேடு ஊராட்சி ஒன்றிய நடுநிலை பள்ளியில் தலைமை ஆசிரியராக உள்ளார். என் உடன் பிறந்தவர்கள் அண்ணன் மதனகோபால். என்னுடைய குடும்பம் கடந்த ஏப்ரல் 2016 முன்புவரை வாலாஜா முத்துகடை அடுத்துள்ள அம்மூரில் வசித்து வந்தோம். அதன் பின்னர் அனந்தலை கிராமத்தில் என் அப்பா பெயரில் இருந்த இடத்தில் வீடுகட்டி குடும்பத்துடன் தற்போது வரை வசித்து வருகிறோம். கடந்த நவம்பர் மாதம் 2017 முதல் மார்ச் 2019 வரை சென்னையில் சோழிங்கநல்லூரில் உள்ள HCL-ல் பணிபுரிந்து வந்தேன். எங்களுடைய வீட்டின் மின் இணைப்பு Single Phase-ஆக உள்ளது, அந்த பகுதியில் அடிக்கடி வோல்டேஜ் பிரச்சனை இருந்த காரணத்தால் என்னுடைய அப்பா பிரபாகரன் மின் இணைப்பினை Three Phase-ஆக மாற்ற முடிவு செய்தார். எங்கள் வீட்டின் மின் இணைப்பு எண்.243-036-677 ஆகும். Three Phase மின் இணைப்பு பெற கடந்த 16.04.2019 அன்று வாலாஜா மின் வாரிய அலுவலகத்திற்கு சென்று Single Phase மின் இணைப்பில் இருந்து Three Phase ஆக மாற்றுவதற்கான படிவத்தினை பெற்று பூர்த்தி செய்து அதில் என்னுடைய அப்பா பிரபாகரன் கையெழுத்து போட்டு எங்களுடைய வீட்டின் பத்திரத்தின் நகலை அந்த படிவத்துடன் இணைத்து வாலாஜா மின் வாரிய அலுவலகத்திற்கு

சென்று பணியில் இருந்த JE அவர்களிடம் கொடுத்தேன் அந்த படிவத்தினை வாங்கிய JE அதில் கையெழுத்து போட்டு வெளியே உட்கார்ந்திருந்த சரவணன் என்பவரை பார்த்து விண்ணப்பத்தை கொடுக்கும்படியும் அவர் தான் இதனை பிராஸஸ் செய்வார் என்று சொன்னார். நான் விண்ணப்பத்தை சரவணன் அவர்களிடம் கொடுத்தேன் அப்போது தான் அவர் அங்கு Commercial Inspector ஆக வேலை செய்பவர் என்று தெரிந்து கொண்டேன். பின்னர் 19.04.2019 அன்று சரவணன் Commercial Inspector எங்கள் வீட்டிற்கு வந்து மின் மீட்டர் பொருத்தியிருந்ததை பார்த்துவிட்டு மீட்டரில் இருந்த ரீடிங்கை குறித்துக்கொண்டு ரூ.10,500/- கொடு இது இல்லாமல் போர்மேன் மற்றவர்களுக்கு தனியாக கொடுக்க வேண்டும் என்றார், அதற்கு நான் அவரிடம் சார் ரூ.6,850/- என்று உங்கள் ஆபீஸில் எழுதி வைத்துள்ளது என்றேன், அதற்கு அவர் சிறிது நேரம் அமைதியாக இருந்துவிட்டு உன் வேலை உடனடியாக செய்ய முடியாது Single Phase-மீட்டரை முதலில் நீ வேறு இடத்திற்கு ஷிப்ட் செய்ய லெட்டர் கொடு மற்றதை அப்பறம் பார்த்துக்கொள்ளலாம் என்று சொல்லி எங்கள் வீட்டில் இருந்து சென்றுவிட்டார். அதன் பின்னர் என் அப்பாவிடம் மீட்டர் ஷிப்டிங் செய்யுமாறு ஒரு கடிதம் எழுதி அதில் என் அப்பா புகைப்படம் ஒட்டி அதனை நான் 29.04.2019 அன்று வாலாஜா EB ஆபிஸிற்கு சென்று சரவணன் அவர்களிடம் கொடுத்தேன். அதனை வாங்கி கொண்ட திரு.சரவணன் Commercial Inspector பணம் ரூ.10,500/- கொடு இல்லை என்றால் இப்போதைக்கு உங்கள் வேலை நடக்காது உன்னுடைய இஷ்டத்திற்கு எல்லாம் இங்கு நடக்காது என்று சொல்லி அனுப்பிவிட்டார். அதன் பின்னர் என்னுடைய சொந்த வேலையாக கர்நாடகா மாநிலம் மைசூர் சென்றுவிட்டேன். மீண்டும் 16.05.2019 அன்று காலை சுமார் 12.00 மணிக்கு வாலாஜா EB ஆபீஸ் சென்று Commercial Inspector சரவணன் அவர்களை சந்தித்து Single Phase-ல் இருந்து Three Phase மாற்றுவது சம்மந்தான விண்ணப்பம் குறித்து கேட்டேன் அதற்கு அவர் நீ விண்ணப்பம் மட்டும் கொடுத்தால் எப்படி ஏற்கனவே உனக்கு ரூ.10,500/- கொடுக்க வேண்டும் என்று சொல்லிவிட்டேனே என்றார், நான் அவ்வளவு பணம் இல்லை சார் என்று சொன்னதற்கு என்னை பார்த்து உனக்கு எத்தனை முறை சொல்வது ரூ.6,850/- Three Phase கனக்ஷன் கவர்மண்ட் பீஸ் நாங்கள் வந்து போகும் செலவு மற்றது எவ்வளவோ உள்ளது அதற்கான செலவு நீ ரூ.6850/- தனியாகவும், மீட்டர் ஷிப்டிங் செய்ய ரூ.600/- அதில் ரூ.400/- பில் வரும் அதுபோக ரூ.2,350/- தனியாகவும் மொத்தம் ரூ.9,600/- என்னிடம் கொடுத்தால் உன் வேலை முடியும் பணத்தை கொடுக்காமல் சும்மா என்னை வந்து பார்க்க வேண்டாம் நீ கணக்கு கேட்டால் எந்த வேலையும் நடக்காது ரூ.2,350/- தனியா கொடுத்தால் மட்டுமே வேலையை ஆரம்பிப்பேன் என்று கண்டிப்புடன் சொல்லி என்னை வீட்டிற்குபோ நான் உன் வீட்டிற்கு வருகிறேன் பணம் ரூ.9,600/- ரெடியாவைத்திரு என்றார் பின்னர் நான் என்னுடைய வீட்டிற்கு சென்றுவிட்டேன் அதன் பின்னர் 16.05.2019 அன்று மதியம் சுமார் 2 மணி முதல் 2.30 மணியளவில் கமர்ஷியல் இன்ஸ்பெக்டர் திரு.சரவணன் என்னுடைய வீட்டிற்கு வந்தார் வீட்டில் நானும் என்னுடைய அம்மாவும் இருந்தோம், என்னை பார்த்து எங்க நான் கேட்ட பணம் ரூ.9,600/- என்று கேட்டார் அதற்கு நான் சார் ரூ.6,850/- மற்றும் மீட்டர் ஷிப்ட் செய்ய

ரூ.400/- ஆக மொத்தம் ரூ.7,250/- மட்டும் கட்டுகிறேன் என்றேன் அதற்கு அவர் பணம் இல்லாமல் ஏன் என்னை வந்து அலுவலகத்தில் பார்கிறாய் நான் ஏற்கனவே பலமுறை உனக்கு சொல்லிவிட்டேன் ரூ.9,600/- எடுத்துக்கொண்டு நாளை 17.05.2019 என்னை அலுவலகத்திற்கு வந்து பார் உன் வேலை முடியும் பணம் இல்லாமல் எதுவும் செய்யமுடியாது என்று சொல்லி மீட்டர் பாக்ஸ் மாற்றி அமைக்க கட்டை சரியாக அடித்துள்ளார்களா என்று பார்த்துவிட்டு கடைசியாக ரூ.9,600/- இருந்தாமல் மட்டுமே உன் வேலையை செய்ய முடியும் என்று சொல்லி எங்கள் வீட்டிலிருந்து சென்றுவிட்டார். நான் எனது வீட்டின் Single Phase மின் இணைப்பினை Three Phase இணைப்பாக மாற்றவும் மீட்டர் ஷிப்டிங் செய்ய கமர்ஷியல் இன்ஸ்பெக்டர் திரு.சரவணன் அரசுக்கு செலுத்த வேண்டிய பணம் ரூ.6,850/- மற்றும் ரூ.400/- ஆக மொத்தம் ரூ.7,250/-போக கூடுதலாக அவர் லஞ்சமாக கேட்கும் பணம் ரூ.2,350/-ஐ கமர்ஷியல் இன்ஸ்பெக்டர் திரு.சரவணன் அவர்களுக்கு கொடுக்க எனக்கு விருப்பமில்லை. எனவே, லஞ்ச பணம் கேட்ட வாலாஜா மின்சார வாரியத்தில் பணிபுரியும் கமர்ஷியல் இன்ஸ்பெக்டர் திரு.சரவணன் அவர்கள் மீது சட்டபடி நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். இத்துடன் நான் என்னுடைய வீட்டு மின் இணைப்பு அட்டையின் நகலை இணைத்துள்ளேன். இப்படிக்கு ஒப்பம் XXXXXX P. Balaji 17/5/19 (P.BALAJI). Sir, The complaint given by Tr.P.Balaji, S/o Prabakaran, residing at Plot No.2, Thiruvalluvar Nagar, Ananthalai Village, Walaja Taluk, Vellore District was received on 17.05.2019 at 06.30 hrs. After verifying the antecedents of accused and credibility of the complainant with the approval of superiors and concurrence from the DVAC registered a case in Vellore Detachment, Vigilance and Anti Corruption Cr.No.09/2019 u/s 7 of Prevention of Corruption (Amendment) Act 2018 at 07.30 hrs. sd/xxxxxx (S.Vijay)/17.05.2019 Inspr. of Police, V&AC, Vellore.

Sir,

The registered Original First Information Report along with the copy of the EB Card is sent to the Hon'ble Chief Judicial Magistrate and Special Judge, Vellore and the other copies of FIR to the officers' concerned.

Enclosures:

1. The complaint of Tr.P.Balaji, S/o Prabakaran, residing at Plot No.2, Thiruvalluvar Nagar, Ananthalai Village, Walaja Taluk, Vellore District
2. The copy of EB Card.

(signature) 17/05/19
(S.VIJAY)
Insp/V&AC/VLR